# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி.

**முன்னிலை:- திருமதி R.D. குருலட்சுமி,** M.A.,M.L., PGDI & CL.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருத்தணி.

திருவள்ளுவராண்டு 2055 குரோதி வருடம் தைத்திங்கள் 10-ம் நாள்

2025 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 23 ஆம் நாள் வியாழக்கிழமை

இடைநிலை மனு எண்.5/2024

இன்

அசல் வழக்கு எண்.35/2021

(CNR.No.TNTR21-000040-2021)

1. திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், சிவ்வாடா அஞ்சல், N.N.கண்டிகை கிரமத்தில் வசிக்கும் லேட் செங்கம்ம நாயுடு மனைவி சுமார் 68 வயதுள்ள ராஜம்மாள் (இறந்துவிட்டார்)
2. திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், சிவ்வாடா அஞ்சல், N.N.கண்டிகை கிரமத்தில் வசிக்கும் லேட் செங்கம்ம நாயுடு மகள் சுமார் 48 வயதுள்ள வசந்தி
3. திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், சிவ்வாடா அஞ்சல், N.N.கண்டிகை கிரமத்தில் வசிக்கும் லேட் செங்கம்ம நாயுடு மகள் சுமார் 11 வயதுள்ள ஜெயந்தி
4. திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், சிவ்வாடா அஞ்சல், N.N.கண்டிகை கிரமத்தில் வசிக்கும் முரளி மகன் சுமார் 30 வயதுள்ள மாணிக்கம் ... மனுதாரர்கள்/1 முதல் 3, 5 பிரதிவாதிகள்

/எதிர்/

1. திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், சிவ்வாடா அஞ்சல், N.N.கண்டிகை கிரமத்தில் வசிக்கும் ராமகிருஷ்ம்ம மகன் சுமார் 66 வயதுள்ள P. ராமமூர்த்தி நாயுடு ... 1 ம் எதிர்மனுதாரர்/வாதி
2. திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், சிவ்வாடா அஞ்சல், N.N.கண்டிகை கிரமத்தில் வசிக்கும் சகாயம் மனைவி சுமார் 50 வயதுள்ள லதா
3. திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி நகரம் மற்றும் வட்டத்தில் அமைந்துள்ள திருத்தணி வட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரியும் வட்டாட்சியர்
4. திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி நகரம் மற்றும் வட்டத்தில் அமைந்துள்ள திருத்தணி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரியும் வருவாய் கோட்டாட்சியர்
5. திருவள்ளூர் நகரம், வட்டம் மற்றும் மாவட்டத்தில் அமைந்துள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பணிபுரியும் மாவட்ட ஆட்சியர்

... 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/ 4, 6 முதல் 8 பிரதிவாதிகள்

கிராம நிர்வாக அலுவலர் உதவியுடன் வழக்கு சொத்துக்களை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு, அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய உத்தரவிட கோரி மனுதாரரால் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 26 விதி 9–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் செய்யப்பட்டுள்ள நாள்: 11.12.2024.

இம்மனு கடந்த 02.01.2025 ம் தேதி என் முன்னர் இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/1 முதல் 3, 5 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திருவாளர் P. குப்பன் அவர்கள் முன்னிலையாகியும், 1 ம் எதிர்மனுதாரர்/ வாதி தரப்பில் வழக்கறிஞர் திருவாளர் C.N. நடராஜன் அவர்கள் முன்னிலையாகியும், 2 முதல் 5 எதிர்மனுதாரர்/ 4, 6 முதல் 8 பிரதிவாதிகள் அசல் வழக்கில் ஒருதரப்பாக்கப்பட்டும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், இருதரப்பு வழக்காவணங்களைப் பரிசீலனை செய்தும், இந்நாள் வரை நிலுவையில் இருந்த இம்மனுவில் இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

<u>**உத்தரவாணை**</u>

1. இம்மனு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவாணை பிறப்பிக்கப்படுகிறது.
2. அவரவர் செலவுத் தொகையை அவரவர்களே ஏற்றுக் கொள்ள வேண்டுமென உத்தரவாணை பிறப்பிக்கப்படுகிறது.

<u>**செலவுத் தொகைப் பட்டியல்**</u>

இருதரப்பிலும் செலவுத் தொகைப்பட்டியல் தாக்கல் செய்யப்படவில்லை.

2025 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 23 ஆம் நாள் என் கையழுத்திடப்பட்டு, இந்நீதிமன்ற இலட்சினைப் பதிப்பிக்கப்பட்டது.

Sd/- R.D. Gurulakshmi
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருத்தணி.